கரடிக் குடித்தனம்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்:பூ.சோமசுந்தரம்
ஓவியர்: எவ்கேனி ரச்சேவ்

கரடிக் குடித்தனம்

விலங்குகள் பற்றிய ருஷ்ய மக்கள் கதைகள்

மக்கள் கதைகளில் நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், எல்லாமே வழக்கத்துக்கு மாறானவை. விலங்குகளும் பட்சிகளும் தனிப்பட்ட விதத்தில் நடந்து கொள்ளும்: மனிதர்கள் போலப் பேசும், நல்லவர்களோ, கெட்டவர்களோ, துணிவு உள்ளவர்களோ, கோழைகளோ, அசடுகளோ, அறிவுள்ளவர்களோ ஆன பல வகை மனிதர்களைப் போலச் சிந்திக்கும், செயல் புரியும்.

இந்த மாறுதலுக்குத் துணை செய்கின்றன ஓவியர் யெவ்கேனி ரச்சேவின் அருமையான படங்கள். சாதாரணப் பண்டங்களையும் விலங்குகளையும் கதைகளின் பாத்திரங்களாகச் சித்திரிக்கும் அற்புத மேதை வாய்ந்தவர் அவர்.

விலங்குகள் பற்றிய ருஷ்ய மக்கள் கதைகள் இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அலெக்சேய் தல்ஸ்தோயின் சொற்களில் அமைந்த இந்தக் கதைகள் சின்னஞ் சிறிய வாசகர்களுக்கு ஏற்றவை.

பொருளடக்கம்

கிழங்கு	*8*
கரடிக் குடித்தனம்	*12*
ஓநாயும் ஆட்டுக்குட்டிகளும் . .	*24*
நரியும் கருங்குருவியும்	*32*
உழவனும் கரடியும்	*42*
நரியும் நாரையும்	*46*
முயலின் தற்பெருமை	*50*
கரடியும் நரியும்	*54*
பூனையும் ஆட்டுக் கடாக்களும் . .	*60*
அன்னப் பறவைகள்	*68*

கிழங்கு

தாத்தா டர்னிப்புக் கிழங்கை ஊன்றி விட்டுச் சொன்னார்:

''வளர்வாய், வளர்வாய், கிழங்கே, இனிப்பாய்! வளர் வாய், வளர்வாய், கிழங்கே, உரப்பாய்!''

இனிப்பாகவும் உரப்பாகவும் ரொம்ப ரொம்பப் பெரி தாகவும் வளர்ந்தது கிழங்கு. தாத்தா கிழங்கைப் பறித்து எடுக்கப் போனார். பிடித்து இழுத்தார், இழுத்தார், பறித்து எடுக்க முடியவில்லை.

தாத்தா பாட்டியைக் கூப்பிட்டார்.

பாட்டி தாத்தாவையும்
தாத்தா கிழங்கையும்

பிடித்து இழுத்தார்கள், இழுத்தார்கள்,
பறித்து எடுக்க முடியவில்லை.
பாட்டி பேத்தியைக் கூப்பிட்டாள்.

பேத்தி பாட்டியையும்
பாட்டி தாத்தாவையும்
தாத்தா கிழங்கையும்

பிடித்து இழுத்தார்கள், இழுத்தார்கள், பறித்து எடுக்க முடியவில்லை. பேத்தி நாயைக் கூப்பிட்டாள்.

நாய் பேத்தியையும் பேத்
திபாட்டியையும் பாட்டி
தாத்தாவையும் தாத்தா
கிழங்கையும்

பிடித்து இழுத்தார்கள், இழுத்தார்கள்,
பறித்து எடுக்க முடியவில்லை.
நாய் பூனையைக் கூப்பிட்டது.

பூனை நாயையும்
நாய் பேத்தியையும்

பேத்தி பாட்டியையும்
பாட்டி தாத்தாவையும்
தாத்தா கிழங்கையும்

பிடித்து இழுத்தார்கள், இழுத்தார்கள்,
பறித்து எடுக்க முடியவில்லை.
பூனை சுண்டெலியைக் கூப்பிட்டது.

சுண்டெலி பூனையையும்
பூனை நாயையும்
நாய் பேத்தியையும்
பேத்தி பாட்டியையும்
பாட்டி தாத்தாவையும்
தாத்தா கிழங்கையும்

பிடித்து இழுத்தார்கள், இழுத்தார்கள், கிழங்கைப்
பறித்து எடுத்து விட்டார்கள்.

கரடிக் குடித்தனம்

பானைகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு போன நாட்டுப் புறத்தான் ஒரு பானையைத் தவற விட்டு விட்டான்.

ஈ-ரீங்காரி பறந்து வந்து கேட்டது:

‘‘யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?’’

பார்க்கிறதோ, வீட்டில் ஒருவரும் இல்லை. பானைக்குள் பறந்து போய்க் குடி இருக்கத் தொடங்கிற்று.

கொசு-ஙொய்மொய் பறந்து வந்து கேட்டது:

‘‘யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?’’

‘‘நான்தான் ஈ-ரீங்காரி. நீ யார்?’’

‘‘நான் கொசு-ஙொய்மொய்.’’

‘‘வந்து என்னோடு குடியிரு.’’

ஆக இரண்டும் சேர்ந்து வாழத் தொடங்கின.

சுண்டெலி-கறுமுறுப்பான் ஓடி வந்து கேட்டது:

''யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?''

''நான்தான் ஈ-ரீங்காரி.''

''நான் கொசு-நொய்மொய். நீ யார்?''

''நான் சுண்டெலி-கறுமுறுப்பான்.''

''வந்து எங்களோடு குடியிரு.''

மூன்றும் சேர்ந்து வாழத் தொடங்கின.

தவளை-குவாக்குவாக் தாவி வந்து கேட்டது:

''யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?''

''நான்தான் ஈ-ரீங்காரி.''

''நான் கொசு-ஙொய்மொய்.''

''நான் சுண்டெலி-கறுமுறுப்பான். நீ யார்?''

நான் தவளை-குவாக்குவாக்.''

''வந்து எங்களோடு குடியிரு.''

நான்கும் சேர்ந்து வாழத் தொடங்கின.

EP

ஒரு முயல் ஓடி வந்து கேட்டது:
''யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?''
''நான்தான் ஈ-ரீங்காரி.''
''நான் கொசு-நொய்மொய்.''
''நான் சுண்டெலி-கறுமுறுப்பான்.''
''நான் தவளை-குவாக்குவாக். நீ யார்?''
''நான் முயல்-கோணல்காலன்.''
''வந்து எங்களோடு குடியிரு.''
ஐந்தும் சேர்ந்து வாழத் தொடங்கின.

பக்கத்தில் ஓடின நரி கேட்டது:
''யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?''
''நான்தான் ஈ-ரீங்காரி.''
''நான் கொசு-நொய்மொய்.''
''நான் சுண்டெலி-கறுமுறுப்பான்.''
''நான் தவளை-குவாக்குவாக்.''
''நான் முயல்-கோணல்காலன். நீ யார்?''
''நான் நரி-பேச்சழகி.''
''வந்து எங்களோடு குடியிரு.''

ஆறும் சேர்ந்து வாழத் தொடங்கின.
ஓநாய் ஓடி வந்து கேட்டது:
''யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?''
''நான்தான் ஈ-ரீங்காரி.''
''நான் கொசு-ஙொய்மொய்.''
நான் சுண்டெலி-கறுமுறுப்பான்.''
''நான் தவளை-குவாக்குவாக்.''
''நான் முயல்-கோணல்காலன்.''
''நான் நரி-பேச்சழகி. நீ யார்?''
''நான் ஓநாய்-பேரோநாய், காரானைப் புதர்க்காரன்.''

‘‘வந்து எங்களோடு குடியிரு.’’

ஆக ஏழும் சேர்ந்து வாழத் தொடங்கின.

சேர்ந்து வாழ்ந்தால் துன்பம் இல்லை.

கரடி வந்து தட்டிற்று:

‘‘யாருடையது மாட வீடு? வீட்டில் இருப்பது யார்?’’

‘‘நான்தான் ஈ-ரீங்காரி.’’

‘‘நான் கொசு-மொய்மொய்.’’

‘‘நான் சுண்டெலி-கறுமுறுப்பான்.’’

‘‘நான் தவளை-குவாக்குவாக்.’’

‘‘நான் முயல்-கோணல்காலன்.’’

‘‘நான் நரி-பேச்சழகி. நீ யார்?’’

‘‘நான் ஓநாய்-பேரோநாய், காரானைப் புதர்க்காரன். நீ யார்?’’

‘‘நான் உங்களை விரட்ட வந்த குடித்தனக்காரன்.’’

கரடி பானை மேல் உட்கார்ந்தது, பானை உடைந்தது, எல்லாப் பிராணிகளும் பயந்து ஓடி விட்டன.

ஓநாயும்
ஆட்டுக்குட்டிகளும்

ஒரு வெள்ளாடு தன் குட்டிகளோடு வாழ்ந்து வந்தது.

பட்டுப் புல்லை மேயவும் குளிர்ந்த நீரைக் குடிக்கவும் தாய் ஆடு காட்டுக்குப் போகும். அம்மா போனதும் குட்டிகள் வீட்டைப் பூட்டி உள்ளே குந்தி இருக்கும்.

தாய் ஆடு திரும்பி வந்து, கதவைத் தட்டி, இப்படிப் பாடும்:

‘‘ஆட்டுக்குட்டிகளே, அமுதக் கட்டிகளே!
பூட்டைத் திறவுங்களே, புக விடுங்களே!
அம்மா வந்திருக்கிறேன், அம்மம் தந்திட.
மடியிலே பால் பெருகுதே,
பெருகிக் குளம்பில் வழியுதே,
வழிந்து தரையில் ஒழுகுதே.’’

அதைக் கேட்டு ஆட்டுக்குட்டிகள் கதவைத் திறந்து அம்மாவை உள்ளே வர விடும். அம்மா குட்டிகளுக்குப் பாலூட்டிச் சீராட்டி விட்டு மறுபடி காட்டுக்குப் போகும். குட்டிகள் கதவைக் கெட்டியாகப் பூட்டிக் கொள்ளும்.

தாய் ஆடு பாடியதை ஒட்டுக் கேட்டது ஓர் ஓநாய். ஒரு தடவை தாய் ஆடு போனதும் ஓநாய் அந்த வீட்டுக்கு வந்து கட்டைத் தொண்டையில் கூப்பாடு போட்டது:

''அட, குட்டிகளா!
ஆட்டுக்குட்டிகளா!
பூட்டைத் திறவுங்கள்,
புகவே விடுங்கள்.
அம்மா வந்தேன்,
பாலைக் கொணர்ந்தேன்.
குளம்பில் நீர் தளம்புதே!''

ஆட்டுக்குட்டிகள் கதவைத் திறக்கவில்லை.

''தெரியும், தெரியும் எங்களுக்கு! இது ஒன்றும் அம்மா வின் குரல் இல்லை! அம்மா கீச்சுக் குரலில் பாடுவாள். அவள் சொல்லும் வார்த்தைகளும் வேறே'' என்றன.

ஓநாயால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கருமானிடம் போய், கீச்சுக் குரலில் பாட வாக்காகத் தொண்டையை மாற்றித் தரும்படிக் கேட்டது. கருமான் அதன் தொண் டையை மாற்றித் தந்தான். ஓநாய் மறுபடி ஆட்டின் வீட் டுக்குப் போய், புதரில் மறைந்து கொண்டது.

தாய் ஆடு வந்து கதவைத் தட்டிற்று:

''ஆட்டுக்குட்டிகளே, அமுதக் கட்டிகளே!
பூட்டைத் திறவுங்களே, புக விடுங்களே!
அம்மா வந்திருக்கிறேன், அம்மம் தந்திட.
மடியிலே பால் பெருகுதே,
பெருகிக் குளம்பில் வழியுதே,
வழிந்து தரையில் ஒழுகுதே.''

குட்டிகள் தாய்க்குக் கதவைத் திறந்து விட்டு, ஓநாய் வந்ததையும் தங்களைத் தின்னப் பார்த்ததையும் விவரமாகச் சொல்லின.

அம்மா குட்டிகளுக்குப் பாலூட்டிச் சீராட்டி விட்டு, கண்டிப்பாகச் சொல்லிற்று:

''யாராவது நம் வீட்டுக்கு வந்து, கட்டைத் தொண்டையில் பாடி, நான் சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும் சொல்லாமல் கேட்டால், கதவைத் திறக்காதேயுங்கள், யாரையும் உள்ளே விடாதேயுங்கள்.''

தாய் ஆடு போனதும் போகாததுமாக ஓநாய் மறுபடி அதன் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டி, கீச்சுக் குரலில் பாடத் தொடங்கிற்று:

''ஆட்டுக்குட்டிகளே, அமுதக் கட்டிகளே!
பூட்டைத் திறவுங்களே, புக விடுங்களே!
அம்மா வந்திருக்கிறேன், அம்மம் தந்திட.
மடியிலே பால் பெருகுதே,
பெருகிக் குளம்பில் வழியுதே,
வழிந்து தரையில் ஒழுகுதே!''



ஆட்டுக்குட்டிகள் கதவைத் திறந்தன. ஓநாய் வீட்டுக்குள் பாய்ந்து எல்லாக் குட்டிகளையும் தின்று விட்டது. ஓர் ஆட்டுக்குட்டி மட்டும் அணைந்த அடுப்புக்குள் ஒளிந்து கொண்டது.

தாய் ஆடு வந்தது. கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தது, மறுபடி மறுபடி பாடிற்று, அப்படியும் ஒரு பதிலும் வரவில்லை. பார்க்கிறதோ, கதவு திறந்திருந்தது. வீட்டுக்குள் ஓடிற்று. அங்கே ஒருவரும் இல்லை. அடுப்புக்கு உள்ளே எட்டிப் பார்த்தது. அங்கே ஒரு குட்டி இருந்ததைக் கண்டது.

தனக்கு நேர்ந்த விபத்தைத் தெரிந்து கொண்டதும் தொப்பென்று பெஞ்சியில் உட்கார்ந்து பொங்கி அழவும் புலம்பவும் தலைப்பட்டது:

''ஆட்டுத் தாய் என் குட்டிகளா,
பாட்டில் மயங்கும் சிட்டுகளா!
பூட்டை ஏன் திறந்திட்டீர்
காட்டு ஓநாய்க் குரலுக்கு?''

இதைக் கேட்ட ஓநாய் ஆட்டின் வீட்டுக்குள் வந்து அதனிடம் சொல்லிற்று:

''என்ன அக்கா நீ இப்படிப் படாப் பழி சாட்டுகிறாய் என் மேலே? உன் குட்டிகளை நான் ஒன்றும் தின்னவில்லை. போதும் ஒப்பாரி வைத்தது. காட்டுக்குப் போகலாம் வா, சுற்றி உலாவுவோம்.''

அவை காட்டுக்குப் போயின. அங்கே ஒரு கிடங்கு இருந்தது. கிடங்கில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

ஆடு ஓநாயிடம் சொல்லிற்று:

''இந்தக் கிடங்கைத் தாண்டிப் பார்ப்போமே, ஊம்?''

அவை தாவின. ஆடு தாண்டிக் குதித்தது. ஓநாய் துள்ளிற்று, ஆனால் நெருப்பு எரிந்து கொண்டிருந்த கிடங்கில் விழுந்தது. நெருப்புச் சூட்டால் அதன் வயிறு வெடித்தது. அதிலிருந்து வெளியே தாவின ஆட்டுக்குட்டிகள். எல்லாம் உயிரோடு இருந்தன, தாயிடம் துள்ளி ஓடின! அப்புறம் அவை முன்போலவே சுகமாய் வாழ்ந்தன.

நரியும் கருங்குருவியும்

ஒரு கருங்குருவி மரத்தின் மேலே கூடு கட்டி, முட்டைகள் இட்டு, குஞ்சுகளை வளர்த்து வந்தது. இதைத் தெரிந்து கொண்டது ஒரு நரி. ஓடி வந்து வாலால் மரத்தை டொக்கு-டொக்கென்று அடிக்கத் தலைப்பட்டது.

கருங்குருவி கூட்டிலிருந்து எட்டிப் பார்த்தது. நரி அதனிடம் சொல்லிற்று:

''வாலால் மரத்தை வெட்டுவேன். கருங்குருவீ, உன்னையும் உன் குஞ்சுகளையும் தின்பேன்!''

கருங்குருவி பயந்து போயிற்று. நரியைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டது:

''தாயே நரியம்மா, வெட்டாதே என் மரத்தை, கெடுக்காதே என் குலத்தை! பணியாரங்களும் தேனும் நீ தின்ன வகை செய்கிறேன்.''

''சரி, பணியாரங்களும் தேனும் நான் தின்ன வகை செய்தாயானால் மரத்தை வெட்ட மாட்டேன்!''

''அப்படியானால் என்னோடு வா நெடுஞ்சாலைக்கு.''

நரியும் கருங்குருவியும் நெடுஞ்சாலைக்குப் புறப்பட்டன கருங்குருவி பறந்தது, நரி அதன் பின்னே ஓடிற்று.

ஒரு பாட்டியும் பேத்தியும் பணியாரங்கள் நிறைந்த கூடையும் தேன் நிறைந்த கலயமும் எடுத்துக் கொண்டு போவதைக் கருங்குருவி கண்டது.

நரி ஒளிந்து கொண்டது. கருங்குருவியோ சாலேயில் இறங்கி,

கொஞ்சம் ஓடி, பறக்க முடியாதது போலப் பாசாங்கு செய்தது: தரை யிலிருந்து உயரே எழும்பிற்று, மறு

படி உட்கார்ந்தது. எழும்பிற்று, மறுபடியும் உட்கார்ந்தது.

பேத்தி பாட்டியிடம் சொன்னுள்:

''இந்தப் பட்சியைப் பிடிப்போம் வா!''

''நாமாவது இதைப் பிடிப்பதாவது!'' என்முள் பாட்டி.

''எப்படியாவது பிடித்து விடுவோம். அதன் இறக்கையில் அடிபட்டிருப்பது போல் இருக்கிறது. ரொம்ப ரொம்ப அழகான பட்சி!''

பாட்டியும் பேத்தியும் கூடையையும் கலயத்தையும் தரையில் வைத்து விட்டுக் கருங்குருவியின் பின்னே ஓடிஞர்கள்.

கருங்குருவி அவர்களைப் பணியாரங்களிலும் தேனிலுமிருந்து அப்பால் இட்டுப் போயிற்று. நரி தருணத்தைக் கைவிடவில்லை: பணியாரங்களையும் தேனையும் வயிறு கொண்ட மட்டும் தின்று தீர்த்ததோடு, கொஞ்சம் சேமித்தும் வைத்துக் கொண்டது.

கருங்குருவி சிவ்வென்று கிளம்பித் தன் கூட்டுக்குப் பறந்தது.

நரியோ, விடாமல் பின்னே வந்து மரத்தை வாலிஞல் டொக்கு-டொக்கென்று அடித்தது.

''வாலால் மரத்தை வெட்டுவேன். கருங்குருவீ, உன்னையும் உன் குஞ்சுகளையும் தின்பேன்!''

கருங்குருவி கூட்டிலிருந்து எட்டிப் பார்த்து, நரியைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டது:

''தாயே நரியம்மா, வெட்டாதே என் மரத்தை, கெடுக்காதே என் குலத்தை! நீ பீர் குடிக்க வகை செய்கிறேன்.''

''ஊம், சீக்கிரம் போவோம்! கொழுப்பும் இனிப்பும் வயிறு நிறையத் தின்று விட்டேன், ஒரே தாகமாய் இருக்கிறது!''

கருங்குருவி சாலைக்கு மேல் மறுபடி பறந்தது, நரி அதன் பின்னே ஓடிற்று.

பீர் பீப்பாயை வண்டியில் ஏற்றிக் கொண்டு போன ஒரு நாட்டுப்புறத்தானைக் கருங்குருவி கண்டது. அவனை நெருங்கி, குதிரை மேலும் பீப்பாய் மேலும் மாற்றி மாற்றி உட்கார்ந்

தது. நாட்டுப்புறத்தானுக்கு ஒரே எரிச்சலை மூட்டி விட்டது அது. அப்புறம் கருங்குருவி ஆப்பு மேல் (பீப்பாயின் அடைப்பான் மேல்) உட்காரவே, நாட்டுப்புறத்தான் கோடாலியை ஓங்கி ஒரு போடு போட்டான். ஆப்பு பீப்பாயிலிருந்து துண்டாய்த் தெறித்து விழுந்து விட்டது. அவன் கருங்குருவியை விரட்டிக் கொண்டு ஓடினன்.

பீப்பாயிலிருந்து பீர் தரையில் கொட்டிற்று.

நரி வேண்டிய அளவு பீரைக் குடித்து விட்டு, பாட்டுக்கள் பாடிக் கொண்டு நடை போட்டது.

கருங்குருவி தன் கூட்டுக்குப் பறந்தது. நரியோ, மறுபடியும் அதன் பின்னே வந்து வாலால் மரத்தை டொக்கு-டொக்கென்று அடித்தது.

''கருங்குருவீ, கருங்குருவீ, நான் தின்ன வகை செய்தாயா?'' என்று கேட்டது.

''செய்தேன்'' என்றது கருங்குருவி.

''குடிக்க வகை செய்தாயா?''

''செய்தேன்.''

''இப்போது நான் சிரிக்க வகை செய், இல்லாவிட்டால் வாலால் மரத்தை வெட்டுவேன். கருங்குருவீ, உன்னையும் உன் குஞ்சுகளையும் தின்பேன்.''

கருங்குருவி நரியைக் கிராமத்துக்குக் கூட்டிப் போயிற்று. ஒரு கிழவி பால் கறப்பதையும் கிழவன் மரவுரிச் செருப்பு பின்னுவதையும் கண்டது.

கிழவியின் தோள் மேல் உட்கார்ந்தது கருங்குருவி.

''இந்தா, கிழவீ, அசையாமல் இரு, நான் கருங்குருவியைக் கொல்லுகிறேன்!'' என்று சொல்லி, கிழவியின் தோளில் அடித்தான் கிழவன். ஆனல் அடி கருங்குருவியின் மேல் படவில்லை.

கிழவி விழுந்தாள். பாத்திரம் பாலோடு குப்புறக் கவிழ்ந்தது. கிழவி எழுந்திருந்து கிழவனைத் திட்டி நொறுக்கினள்.

அசட்டுக் கிழவனைக் கேலி செய்து வெகு நேரம் சிரித்துக் கொண்டிருந்தது நரி.

கருங்குருவி தன் கூட்டுக்குப் பறந்தது. குஞ்சுகளுக்கு அது இரை ஊட்டி முடிப்பதற்குள் நரி வாலினல் மரத்தை மறுபடி டொக்கு-டொக்கென்று அடிக்கத் தொடங்கி விட்டது:

''கருங்குருவீ, கருங்குருவீ, நான் தின்ன வகை செய்தாயா?''

''செய்தேன்!''

''குடிக்க வகை செய்தாயா?''

''செய்தேன்!''

''சிரிக்க வகை செய்தாயா?''

''செய்தேன்!''

''இப்போது பயப்பட வகை செய்.''

கருங்குருவிக்குக் கோபம் வந்தது.

''கண்களை மூடிக் கொள், என் பின்னே ஓடி வா!'' என்றது.

கருங்குருவி கத்திக் கொண்டே பறந்தது. நரி கண்களைத் திறக்காமல் அதன் பின்னே ஓடிற்று.

நேரே வேட்டைக்காரர்களிடம் நரியை அழைத்து வந்தது கருங்குருவி.

''நரியே, இப்போது பயப்படு!'' என்றது.

கண்களைத் திறந்த நரி நாய்களைக் கண்டதும் எடுத்தது ஓட்டம்... நாய்கள் அதைத் துரத்தின. அது அரும்பாடு பட்டுத் தன் வளை போய்ச் சேர்ந்தது.



வளைக்குள் நுழைந்து கொஞ்சம் இளைப்பாறிய பிறகு கேள்விகள் கேட்கத் தொடங்கிற்று:

‘‘கண்களே, கண்களே, நீங்கள் என்ன செய்தீர்கள்?’’

‘‘நாய்கள் நரியைத் தின்று தீர்த்து விடாமல் இருப்பதற்காகப் பார்த்துக் கொண்டிருந்தோம்.’’

‘‘காதுகளே, காதுகளே, நீங்கள் என்ன செய்தீர்கள்?’’

‘‘நாய்கள் நரியை வேட்டையாடி விழுங்காமல் இருப்பதற்காக நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம்.’’

‘‘கால்களே, கால்களே, நீங்கள் என்ன செய்தீர்கள்?’’

‘‘நாய்கள் நரியைச் சாடி விடாமல் இருப்பதற்காக ஓடிக் கொண்டிருந்தோம்.’’

‘‘அப்புறம், அடர் வாலே, நீ என்ன செய்தாய்?’’

‘‘வெட்டு மரங்களையும் புதர்களையும் மரக் கட்டைகளையும் பிடித்தேன், நீ தப்பி ஓடுவதைத் தடுத்தேன்.’’

நரிக்கு வால் மேல் கடுங் கோபம் வந்து விட்டது. வளையிலிருந்து அதை வெளியே நீட்டிற்று.

‘‘இந்தாருங்கள், நாய்களே, தின்னுங்கள் என் வாலை!’’ என்றது.

நாய்கள் வாலைப் பிடித்து நரியை வளையிலிருந்து வெளியே இழுத்து விட்டன.



உழவனும் கரடியும்

ஓர் உழவன் காட்டில் டர்னிப்புக் கிழங்கு பயிரிடப் போனுன். நிலத்தை உழுதான், பண்படுத்தினுன். அப்போது ஒரு கரடி அவனிடம் வந்தது.

''உழவா, உன்னை முறித்துப் போடுவேன்'' என்றது.

''என்னை முறித்துப் போடாதே, கரடித் தம்பீ, வா, சேர்ந்து கிழங்கு பயிரிடுவோம். வேர்ப் பகுதியை நான் எடுத்துக் கொள்கிறேன், தழைப் பகுதியை நீ எடுத்துக் கொள்'' என்ருன் உழவன்.

''அப்படியே செய்வோம். ஆனுல் நீ மட்டும் ஏமாற்றினுயோ, காட்டில் என் கிட்டே வராதே.''

இப்படிச் சொல்லி விட்டுக் கரடி காட்டுக்குள் போய் விட்டது. கிழங்கு செழிப்பாக வளர்ந்தது. இலையுதிர் காலத்தில்

கிழங்கைத் தோண்டி எடுக்க வந்தான் உழவன். கரடி காட்டின் உள்ளிருந்து வந்தது.

''உழவா, விளைச்சலைப் பங்கிட்டுக் கொள்வோம். என் பங்கைக் கொடு'' என்றது.

''சரி, கரடித் தம்பீ, தழை உனக்கு, வேர் எனக்கு.''

உழவன் கரடிக்குத் தழைப் பகுதியைக் கொடுத்து விட்டு, கிழங்குகளை வண்டியில் ஏற்றி விற்பதற்குக் கொண்டு போனான். எதிரே வந்தது கரடி.

''உழவா, எங்கே போகிறாய்?'' என்று கேட்டது.

''வேர்களை விற்பதற்காக நகரத்துக்குப் போகிறேன், கரடித் தம்பீ.''

''எங்கே, ஒன்று கொடு, வேர் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம்.''

உழவன் அதற்கு ஒரு கிழங்கு கொடுத்தான். கரடி தின்று பார்த்து விட்டுக் கடுங் கோபத்துடன் உறுமிற்று:

''அ-டேய், உழவா, என்னை ஏமாற்றி விட்டாயே! உன் வேர்கள் இனிப்பானவை. இனி விறகு வெட்ட என் காட்டிற்கு வராதே. வந்தால் முறித்துப் போடுவேன்.''—அடுத்த ஆண்டு உழவன் அதே இடத்தில் தானியம் பயிரிட்டான். அறுவடைக்கு வந்தவன், கரடி காத்திருக்கக் கண்டான்.

''இந்தத் தடவை உன்னால் என்னை ஏய்க்க முடியாது. கொடு என் பங்கை!'' என்று கேட்டது கரடி.

''அப்படியே செய்வோம், கரடித் தம்பீ. நீ வேர்ப் பகுதியை வைத்துக் கொள். தழையையாவது எனக்குக் கொடு'' என்றான் உழவன்.

தானியம் அறுவடை ஆனதும் உழவன் கரடிக்கு வேர்ப் பகுதியைக் கொடுத்து விட்டுத் தானியத்தை வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு போய் விட்டான். கரடி எப்படி எல்லாமோ முனைந்து பாடுபட்டது, ஆனாலும் வேர்களைக் கொண்டு ஒன்றுமே செய்ய முடியவில்லை. உழவன் மேல் அதற்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. உழவனுக்கும் கரடிக்கும் பகைமை அன்று முதல் தொடங்கிற்று.

நரியும் நாரையும்

நரியும் நாரையும் நண்பர்கள் ஆயின.

நாரைக்கு விருந்து வைக்கத் தீர்மானித்த நரி அதைத் தன் வீட்டுக்கு அழைத்தது.

''வா மருமகப் பிள்ளை, வா அருமைச் சினேகிதா! உனக்கு விருந்து கொடுக்கிறேன்!'' என்றது.

அழைப்பை ஏற்று விருந்துக்குப் போயிற்று நாரை. நரி ரவைக் கஞ்சி காய்ச்சித் தட்டிலே விட்டது. தட்டை நாரைக்கு முன்னே வைத்து உபசரித்தது:

''சாப்பிடு, மருமகப் பிள்ளை, நானே என் கைப்படக் காய்ச்சினேன்.''

நாரை அலகால் டொக்கு-டொக்கென்று தட்டில் தட்டிற்று, ஆனால் வாய்க்குள் ஒன்றும் வரவில்லை!

நரியோ, நக்கி நக்கிக் கஞ்சியைக் குடித்தது, தானே தட்டுக் கஞ்சியையும் குடித்துத் தீர்த்து விட்டது.

கஞ்சியைக் குடித்து விட்டுச் சொல்லிற்று:

''குறைப்பட்டுக் கொள்ளாதே மருமகப் பிள்ளை, உபசரிக்க வேறு ஒன்றும் இல்லை.''

நாரை அதற்குப் பதில் சொன்னது:

''இவ்வளவு செய்தாயே, அத்தை, அதற்கே நன்றி! என் வீட்டுக்கு விருந்து சாப்பிட வா.''

மறு நாள் நரி நாரையின் வீட்டுக்கு விருந்தாடப் போயிற்று. நாரை சாற்றுக் குழம்பு பண்ணி, குறுகலான கழுத்து உள்ள சாடியில் ஊற்றி, நரிக்கு முன்னே வைத்தது.

''சாப்பிடு, அத்தை! கொடுப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை'' என்றது.

நரி சாடியைச் சுற்றிச் சுற்றி வந்தது. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் போயிற்று, சாடியை நக்கிற்று, மோந்து பார்த்தது, ஆனால் குழம்பு ஒரு துளிகூட வாய்க்கு எட்ட வில்லை. தலை சாடிக்குள் நுழையவில்லை.

நாரையோ, அலகால் உறிஞ்சி உறிஞ்சி, குழம்பு முழு வதையும் குடித்துத் தீர்த்து விட்டது.

''குறைப்பட்டுக் கொள்ளாதே, அத்தை! உபசரிக்க வேறு ஒன்றும் இல்லை'' என்றது.

நரிக்கு ஒரே ஏமாற்றமாய்ப் போயிற்று. ஒரு வாரத் துக்குக் காணும் படி வயிறு முட்டச் சாப்பிடலாம் என்று நினைத் திருந்தது. ஆனால் ஒன்றுமே சாப்பிடாமல் வீடு திரும்பிற்று. வினை விதைத்தால் வினை அறுக்கத்தானே வேண்டும்!

அந்த நாள் முதல் நரிக்கும் நாரைக்கும் சினேகம் முறிந்து போயிற்று.

முயலின் தற்பெருமை

ஒரு காட்டில் ஒரு முயல் வசித்து வந்தது. கோடையில் அதன் வாழ்க்கை நன்றாய் இருந்தது, குளிர்காலத்திலோ, மோசமாயிற்று. அது விவசாயிகளின் அடி களத்துக்குப் போய், தானியம் திருடித் தின்ன வேண்டி வந்தது.

ஒரு தரம் அது ஒரு விவசாயியின் அடி களத்துக்குப் போன போது முயல்களின் பெரிய கூட்டத்தைக் கண்டது. அவற்றினிடம் தன் பெருமையைப் பீற்றத் தலைப்பட்டது:

''என் மீசை பெரு மீசை. பாதங்கள் பெரும் பாதங்கள், பற்களும் பெரும் பற்கள். நான் யாருக்கும் அஞ்ச மாட்டேன்'' என்றது.

முயல்கள் இந்தத் தற்பெருமைக்காரனைப் பற்றிக் காக்கை அத்தையிடம் சொல்லின. காக்கை அத்தை தற்பெருமைக்கார முயலைத் தேடி, சாய்ந்து கிடந்த மரத்தின் அடியில் அதைக் கண்டது. முயலுக்குப் பயமாய் இருந்தது.

''காக்கை அத்தை, இனிமேல் நான் பெருமை அடித்துக் கொள்ள மாட்டேன்!'' என்றது.

''நீ எப்படிப் பெருமை அடித்துக் கொண்டாய்?''

''என் மீசை பெரு மீசை, பாதங்கள் பெரும் பாதங்கள், பற்களும் பெரும் பற்கள் என்று.''

''இனி மேல் பெருமை அடித்துக் கொள்ளாதே!'' என்று காக்கை அத்தை முயலைக் கண்டித்தது.

ஒரு நாள் காக்கை வேலி மேல் உட்கார்ந்திருந்த போது நாய்கள் அதைப் பிடித்துத் துன்பப்படுத்தத் தொடங்கின. முயல் இதைப் பார்த்தது.

''காக்கைக்கு எப்படி உதவலாம்?'' என்று யோசித்தது.

மேட்டின் மேல் தாவி உட்கார்ந்தது. முயலைக் கண்ட நாய்கள் காக்கையை விட்டு விட்டு அதைத் துரத்தின. காக்கை மறுபடி வேலி மேல் உட்கார்ந்து கொண்டது. முயல் நாய் களிடமிருந்து தப்பி விட்டது.

கொஞ்ச நேரம் பொறுத்துக் காக்கை அந்த முயலைச் சந்தித்தது.

''அருமையான பிள்ளை நீ! தற்பெருமைக்காரன் அல்ல, துணிச்சல்காரன்!'' என்று பாராட்டிற்று.



கரடியும் நரியும்

ஒரு கரடியும் ஒரு நரியும் வாழ்ந்து வந்தன.

கரடி வீட்டு முகட்டறையில் ஒரு மரத்தொட்டி நிறையத் தேன் வைத்திருந்தது.

நரி அதைத் தெரிந்து கொண்டது. இந்தத் தேனை எடுப்பது எப்படி என்று யோசனை செய்தது. கரடி வீட்டுக்கு வந்து, சன்னலுக்கு வெளியே குந்திக் கொண்டது.

''அண்ணே, என் துன்பம் உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டது.

''என்ன துன்பம் தங்கச்சீ, உனக்கு?''

''என் வீடு மோசம், மூலைகள் சரிந்து விட்டன, நான் அடுப்பே மூட்டவில்லை. உன் வீட்டில் தூங்க இடம் கொடேன்.''

''வா, தங்கச்சீ, இராத்திரி இங்கே இரு.''

இரண்டும் அடுப்புப் பரண் மேல் தூங்குவதற்காகப் படுத்தன. நரி படுத்தபடியே வாலைச் சுழற்றிக் கொண்டிருந்தது. தேனை எப்படி எடுப்பது? கரடி தூங்கிப் போயிற்று. நரி வாலைப் பட்டுப் பட்டென்று அடித்தது.

''தங்கச்சீ, யார் கதவைத் தட்டுகிறார்கள்?'' என்று கேட்டது கரடி.

''என்னைக் கூப்பிடுகிறார்கள். பக்கத்து வீட்டுக்காரிக்குப் பிள்ளை பிறந்திருக்கிறதாம்.''

''அப்படியானுல் போய் விட்டு வா, தங்கச்சீ.''

நரி போயிற்று. ஆனுல் முகட்டறைக்குப் போய், தொட்டித் தேனே நக்கிற்று. வேண்டிய அளவு நக்கித் தீர்த்ததும் திரும்பி வந்து படுத்துக் கொண்டது.

''தங்கச்சீ, தங்கச்சீ, பிள்ளைக்கு என்ன பெயர் வைத்திருக்கிருர்கள்?'' என்று கேட்டது கரடி.

''நக்கன் என்று.''

''இது நல்ல பெயர்.''

அடுத்த இராத்திரி படுத்துக் கொண்டதும் நரி வாலால் பட்டுப் பட்டென்று அடித்தது.

''அண்ணே, அண்ணே, என்னே மறுபடி கூப்பிடுகிருர்கள்.''

''அப்படியானுல் போய் விட்டு வா, தங்கச்சீ.''

நரி முகட்டறைக்குப் போய், பாதித் தேனே நக்கித் தீர்த்து விட்டது. மறுபடி திரும்பி வந்து படுத்துக் கொண்டது.

''தங்கச்சீ, தங்கச்சீ, என்ன பெயர் இட்டிருக்கிருர்கள்?''

''பாதியன் என்று.''

''இது நல்ல பெயர்.''

மூன்ரும் இரவில் நரி வாலேப் பட்டுப் பட்டென்று அடித்தது.

''என்னே மறுபடி கூப்பிடுகிருர்கள்.''

''தங்கச்சீ, தங்கச்சீ, பொட்டெனத் திரும்பி வா. நான் தோசை சுடப் போகிறேன்.''

''சரி, நான் இதோ வந்து விடுகிறேன்.''

நேரே முகட்டறைக்குப் போய் மீதித் தேனே எல்லாம் நக்கித் தீர்த்தது. துளி மிச்சம் இல்லாமல் வழித்துத் தின்று விட்டுத் திரும்பிற்று.

''தங்கச்சீ, தங்கச்சீ, என்ன பெயர் வைத்திருக்கிருர்கள்?''

''வழித்தான் என்று.''

''இது முந்தியதை விட நல்ல பெயர். வா, போய்த் தோசை சுடுவோம்.''

கரடி தோசைகள் சுட்டது.

''ஆமாம் அண்ணே, தொட்டுக் கொள்ளத் தேன் வேண்டுமே, எங்கே வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டது நரி.

''முகட்டறையில்.''

கரடி முகட்டறைக்குப் போய்ப் பார்த்தது. தேன்தான் இல்லை, தொட்டி காலியாய் இருந்தது.

''இதைக் குடித்தது யார்? நீதான், தங்கச்சீ, வேறு யாரும் இல்லை!''

''இல்லை அண்ணே, தேனை நான் கண்ணால் கூடப் பார்க்கவில்லையே. நீயே குடித்து விட்டு என்னைச் சொல்லுகிறாய்!''

கரடி யோசித்து யோசித்துப் பார்த்தது...

''வா, சோதித்துப் பார்ப்போம் யார் குடித்தது என்று. வெயிலில் மல்லாக்கப் படுப்போம். யார் வயிற்றிலிருந்து தேன் கசியுமோ அந்தப் பேர்வழிதான் சாப்பிட்டிருக்க வேண்டும்.''

இரண்டும் வெயிலில் படுத்தன. கரடி தூங்கி விட்டது. நரிக்கோ, தூக்கம் வரவில்லை. பார்த்துக் கொண்டிருந்த போதே அதன் வயிற்றிலிருந்து தேன் கசியத் தொடங்கி விட்டது. அது சட்டென்று தேனை வழித்துக் கரடியின் வயிற்றில் தடவிற்று.

''அண்ணே, அண்ணே! இது என்ன? தேன் குடித்தவன் நீதான்!''

கரடியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குற்றத்தை ஒப்புக் கொண்டது.



பூனையும்
ஆட்டுக் கடாக்களும்

ஒரு வீட்டில் வெள்ளாட்டுக் கடாவும் செம்மறிக் கடாவும் இருந்தன. இரண்டும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. கிடைத்த தீனியைச் சமமாகப் பகிர்ந்து கொண்டன. அவைகளுக்குக் கண்டாலே கரித்தது பூனை வாஸ்காவைத்தான். படு திருடு அது, கொள்ளைக்காரப் பூனை. எப்போது பார்த்தாலும் ஏதாவது கிடைக்காதா என்று நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தது. ஏதாவது பண்டம் கவனிப்பார் இல்லாமல் கிடந்தால் அதைக் கவ்வுவதற்காக ஆலை பாய்ந்தது.

ஒரு நாள் இரண்டு கடாக்களும் அப்பாடா என்று படுத்து வார்த்தையாடிக் கொண்டிருந்த போது திடீரென்று வந்து சேர்ந்தது சாம்பல் நெற்றிப் பூனை முறுமுறுப்பான். வந்து ஒரே ஏக்கத்துடன் கண்ணீர் விட்டது.—''கடுவன் பூனையே, கண்ணீரை ஏன் கொட்டுகிருய், மூன்று கால்களால் ஏன் தத்துகிருய்?'' என்று கேட்டன ஆட்டுக் கடாக்கள்.

''கண்ணீரைக் கொட்டாமல் என்ன செய்வேன்? வீட்டுக்காரி என்னை அடித்தாள், காதுகளைப் பிய்த்தாள், ஒரு காலை ஒடித்தாள், கழுத்தை நெரிப்பேன் என்ருள்.''

''என்ன தப்புக்கு இந்தத் தண்டனை?''

''புளித்த பாலாடையை நக்கித் தின்றதற்கு.''

இப்படிச் சொல்லி மறுபடி கண்ணீர் பெருக்கத் தொடங்கிற்று பூனை-முறுமுறுப்பான்.

''கடுவன் பூனையே, எதற்காக நீ இன்னும் அழுகிருய்?''

''அழாமல் என்ன செய்வேன்? வீட்டுக்காரி என்னை அடித்துக் கொண்டே சொன்னுள்: 'எங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளை

EP

வருவார், புளித்த பாலாடை எனக்கு யார் தருவார்? கடாக்களை வெட்டிக் கறி சமைக்க வேண்டியதுதான், மனம் வரா விட்டாலும்!' '' — ''அட பாவி, சாம்பல் கடுவனே, மூளை கெட்ட பூனையே! எங்களை எதற்காகப் பலி கொடுத்தாய்? இதோ உன்னை முட்டுகிறோம் பார்!'' என்று அலறின கடாக்கள்.

அப்போது பூனை-முறுமுறுப்பான் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கேட்டது. இரண்டு கடாக்களும் அதை மன்னித்து விட்டன. பிறகு என்ன செய்வது என்று மூன்றுமாக ஆலோசித்தன.—''இந்தா, சின்ன அண்ணே, உன் மண்டை வலுவுள்ளது தானா? வாசல் கதவை முட்டிப் பார்'' என்று செம்மறிக் கடாவிடம் சொல்லிற்று பூனை.

செம்மறிக் கடா எழுந்து ஓட்டமாய் ஓடி வாசல் கதவை முட்டிற்று. கதவு அசைந்தது, ஆனால் திறக்கவில்லை.

''என்ன, பெரிய அண்ணே, உன் மண்டை வலுவுள்ளது தானா? வாசல் கதவை முட்டிப் பார்'' என்று வெள்ளாட்டுக் கடாவிடம் சொல்லிற்று பூனை. வெள்ளாட்டுக்கடா எழுந்து ஓட்டமாக ஓடி முட்டவே, வாசல்கதவு திறந்துகொண்டது.

புழுதி படலம் படலமாகக் கிளம்பிற்று, புல் தரையோடு தரையாகச் சாய்ந்தது, செம்மறியும் வெள்ளாடும் ஓடின, அவைகளின் பின்னால் மூன்று கால்களில் தத்திற்று பூனை.

களைத்துப் போன பூனை இரண்டு கடாக்களையும் வேண்டிக் கொண்டது;

''அண்ணன்மாரே, தம்பியை விட்டு விடாதேயுங்கள்...''

வெள்ளாட்டுக் கடா பூனையைத் தன் மேல் உட்கார்த்திக் கொண்டது. காடு, மலை, வனம், வனாந்தரங்களைக்கடந்து ஓடின அவை. இரவும் பகலும் இடை விடாமல், கால்களில் வலு இருந்த வரை வெகு நேரம் ஓடிக் கொண்டிருந்தன.

ஆடுகளும் பூனையும் இளைப்பாறுவதற்காக நின்றன.

இலையுதிர் கால இரவு, குளிராய் இருந்தது. குளிர் காய நெருப்புக்கு எங்கே போவது? பூனை உலர்ந்த மரப்பட்டைகளைச் சேகரித்து, வெள்ளாட்டின் கொம்புகளில்சுற்றி, செம்

மறியின் நெற்றியோடு நெற்றியை மோதச்சொல்லிற்று.

இரண்டு கடாக்களும் மடாரென்று மோதிக் கொள்ளவே கண்களிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன, மரப் பட்டைகளில் தீ பற்றிக் கொண்டது. நெருப்பு மூட்டி, மூன்றும் உட்கார்ந்து குளிர் காயத் தொடங்கின.

அவை சரியாகக் குளிர் காய்வதற்குள் யாரோ முறையிடுவது கேட்டது. பார்த்தால், அது ஒரு கரடி.

''கொஞ்சம் குளிர் காய்ந்து இளைப்பாற இடம் தாருங்கள். எனக்குத் தாவு தீர்ந்து போய் விட்டது...''

''வாரும் கரடியாரே, வந்து இப்படி உட்காரும். எங்கிருந்து வருகிறீர்?''—''தேனீப் பண்ணைக்குப் போனேன், அங்கே கிராமத்தாரோடு அடிபிடி.''

தூக்கம் வந்ததும் கரடி போருக்கு அடியிலும் பூனை போரின் மேலும் செம்மறியும் வெள்ளாடும் நெருப்பின் பக்கத்திலும் படுத்தன. திடீரென்று வந்தன ஏழு சாம்பல் நிற ஓநாய்களும் எட்டாவது வெள்ளை ஓநாயும். அவை நேரே போரின் பக்கம் பாய்ந்தன.

செம்மறியும் வெள்ளாடும் திகில் கொண்டு மே மே என்று கத்தத் தொடங்கின. பூனையோ, இந்த மாதிரிச் சொல்லிற்று:

''கேளப்பா, வெள்ளை ஓநாயே! எங்கள் பெரிய அண்ணனுக்குக் கோபமூட்டாதே. அவன் கோபங் கொண்டு பாய்ந்தால் எல்லாருக்கும் ஆபத்து. அவனுடைய தாடி உங்கள் கண்களில் படவில்லையா, என்ன? வலு எல்லாம் அதில்தான் இருக்கிறது. தாடியால் அவன் மிருகங்களைக் கொல்லுவான், கொம்புகளால் தோலை மட்டுந்தான் உரிப்பான். விளையாடவும் சின்ன அண்ணனோடு பலத்தைச் சோதித்துப் பார்க்கவும் எங்களுக்கு ஆசையாய் இருக்கிறது என்று அவனிடம் மரியாதையாய்க் கேட்டீர்களானால் உங்களுக்கு நல்லது. சின்ன அண்ணன் அதோ, போருக்கு அடியில் படுத்திருக்கிறான்.''

ஓநாய்கள் இதற்காகப் பூனைக்கு நன்றி தெரிவித்து விட்டு, கரடியைச் சூழ்ந்து கொண்டு சீண்டத் தலைப்பட்டன. கரடி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது, அப்புறம் கைக்கு ஓர்

ஓநாயாக லபக்கென்று பிடித்தது! அவ்வளவுதான், அவை அரண்டு போய், வால்களை இடுக்கிக் கொண்டு பெற்றோம் பிழைத்தோம் என்று ஓடி விட்டன.

இதற்குள் வெள்ளாடும் செம்மறியும் பூனையைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடின. அங்கே சாம்பல் நிற ஓநாய்களை மறுபடி கண்டன.

பூனை பரபரவென்று தேவதாரு மரத்தின் உச்சிக்கு ஏறிப் போய் விட்டது. வெள்ளாடும் செம்மறியும் முன்னங் கால்களைக் கிளையில் மாட்டிக் கொண்டு தொங்கின.

ஓநாய்கள் பற்களை நெறுநெறுத்துக் கொண்டு மரத்துக்கு அடியில் நின்றன.

நிலைமை ஆபத்தாய் இருப்பதைக் கண்ட பூனை தேவதாருக் காய்களைப் பறித்து ஓநாய்கள் மேல் எறிந்து கணக்குப் போட்டது:

''ஓர் ஓநாய்! இரண்டு ஓநாய்! மூன்று ஓநாய்! நமக்கு ஆளுக்கு ஒன்று. நான் கொஞ்ச நேரத்துக்கு முன் இரண்டு ஓநாய்களை எலும்புகளோடு தின்று தீர்த்தேன், ஆகையால் என் வயிறு நிறைந்திருக்கிறது. நீ, பெரிய அண்ணே, கரடி வேட்டைக்குப் போனாய், எதையும் பிடிக்காமல் வந்தாய், என் பங்கையும் நீயே எடுத்துக் கொள்!''

பூனை இப்படிச் சொல்லி முடிப்பதற்குள் வெள்ளாடு பிடி நழுவி ஓநாய் மேல் கொம்புகள் பட விழுந்தது.

''விடாதே அவைகளை, பிடித்துக் கொள்!'' என்று கத்திற்று பூனை. ஓநாய்கள் ஒரேயடியாகக் கதி கலங்கிப் போய், திரும்பிக் கூடப் பாராமல் ஓடின. ஒரே ஓட்டமாய் ஓடி விட்டன. பூனையும் வெள்ளாடும் செம்மறியும் மேலே வழி நடந்தன.

அன்னப் பறவைகள்

ஒரு புருசனும் பெண்சாதியும் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு மகள்; ஒரு சின்ன மகன்.

''மகளே, நாங்கள் வேலைக்குப் போகிறோம். தம்பிப் பாப்பாவைப் பார்த்துக் கொள்! வெளியே எங்கும் போகாதே. சமர்த்தாய் இரு. உனக்குத் தலைக்குட்டை வாங்கி வருகிறோம்'' என்றாள் தாய். தகப்பனும் தாயும் போனதும் தாயின் கட்டளையை மகள் மறந்து விட்டாள். தம்பியைச் சன்னலின் கிட்டே புல் மேல் உட்கார்த்தி விட்டு வெளியே போய் விளையாடவும் சுற்றி உலாவவும் தொடங்கினாள்.

அன்னப் பறவைகள் பறந்து வந்து, பையனைத் தூக்கி இறக்கைகள் மேல் வைத்துக் கொண்டு போய் விட்டன.

பெண் திரும்பி வந்து பார்க்கிறாளோ, தம்பிப் பாப்பாவைக் காணோம்! ஐயோ என்று அலறினாள், இங்கும் அங்கும் பாய்ந்தாள், ஆனால் பையனுடைய சுவடே இல்லை!

அவள் தம்பியைக் கூவி அழைத்தாள், கண்ணீர் பெருக்கினாள், அப்பாவும் அம்மாவும் கண்டிப்பார்களே என்று புலம்பினாள், ஆனாலும் பையன் பதில் பேசவில்லை.

அவள் வெட்ட வெளிக்கு ஓடிப் போய்ப் பார்த்தாள். வெகு தொலைவில் அன்னப் பறவைகள் தெரிந்தன. அவை இருண்ட காட்டிற்கு அப்பால் மறைந்து விட்டன. தம்பியை அவையே தூக்கிப் போயிருக்கும் என்று அப்போது அவள் ஊகித்துக்

கொண்டாள். அன்னப் பறவைகள் குறும்பு பண்ணுவதாகவும் குழந்தைகளைத் தூக்கிப் போய்விடுவதாகவும் ஊரில் வெகு காலமாகவே பேச்சு இருந்தது.

பறவைகளை எட்டிப் பிடிப்பதற்காக அவள் ஓடினாள். ஓடுகிற வழியில் கோட்டை அடுப்பு ஒன்றைக் கண்டாள்.

''அடுப்பே, அடுப்பே, அன்னங்கள் பறந்த வழியைச் சொல்லேன்''' என்று கேட்டாள்.

''என்னுடைய கறுப்புத் தானியப் பணியாரத்தைச் சாப்பிடு, சொல்லுகிறேன்'' என்றது அடுப்பு.

''ரொம்பத்தான் வேண்டும் எனக்குக் கறுப்புத் தானியப் பணியாரம்! எங்கள் அப்பா வீட்டில் கோதுமைப் பணியாரத்தைக்கூடச் சீந்துவார் கிடையாதே...''

அடுப்பு ஒன்றும் சொல்லவில்லை. பெண் மேலே ஓடினுள். வழியில் ஓர் ஆப்பிள் மரம் இருந்தது.

''ஆப்பிள் மரமே, ஆப்பிள் மரமே, அன்னப் பறவைகள் பறந்த வழியைச் சொல்லேன்!''

''என்னுடைய காட்டுஆப்பிள் பழத்தைத் தின்னு, சொல்லு கிறேன்.''

''எங்கள் அப்பா வீட்டில் தோட்டத்து ஆப்பிள்களையே சீந்துவார் கிடையாதே!''

ஆப்பிள் மரம் ஒன்றும் சொல்லவில்லை. பெண் மேலே ஓடினுள். பழப்பாகுக் கரைகளுக்கு நடுவே பாலாறு ஓடிக் கொண்டிருந்தது.

''பாலாறே, பழப்பாகுக் கரைகளே, அன்னப் பறவைகள் பறந்த வழியைச் சொல்லுங்களேன்!''

''வெறும் பழப்பாகைத் தின்று பாலைக் குடி, சொல்லு கிறோம்.''

''எங்கள் அப்பா வீட்டில் பாலாடையைக் கூடச் சீந்து வார் கிடையாதே!''

வயல்களிலும் காடுகளிலும் வெகு நேரம் ஓடிக் கொண் டிருந்தாள் அந்தப் பெண். பொழுது சாய்ந்து கொண்டிருந் தது, ஒன்றும் செய்வதற்கில்லை, வீடு திரும்ப வேண்டியது

தான். திடீரென்று ஒரு வீடு பார்வையில் பட்டது. அது கோழிக் கால் மேல் நின்றது, அதற்கு ஒரு சன்னல் இருந்தது, அது சுழன்று கொண்டிருந்தது.

வீட்டில் சூனியக்காரக் கிழவி சணல் கூளத்தை நூலாகத் திரித்துக் கொண்டிருந்தாள். பெஞ்சி மேல் தம்பிப் பாப்பா உட்கார்ந்து வெள்ளி ஆப்பிள்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

பெண் குடிசைக்குள் போனாள்.

''வணக்கம், பாட்டீ!''

''வணக்கம், சின்னப் பெண்ணே! என் கண்ணில் ஏன் பட்டாய்?''

''பாசியிலும் புதை சேற்றிலும் நடந்து வந்தேன், உடையை நனைத்துக் கொண்டேன், குளிர் காய வந்திருக்கிறேன்.''

''உட்காரு. கொஞ்ச நேரம் நூல் திரி.''

நூற்புக் கதிரைக் கொடுத்து விட்டுச் சூனியக்காரக் கிழவி போய் விட்டாள். பெண் நூல் திரித்துக் கொண்டிருந்த போது அடுப்பின் அடியிலிருந்து ஒரு சுண்டெலி திடீரென்று ஓடி வந்து அவளிடம் சொல்லிற்று:

''சின்னப் பெண்ணே, சின்னப் பெண்ணே, எனக்குக் கொஞ்சம் பொங்கல் கொடு, நான் உனக்கு நல்லது சொல்லுகிறேன்.''

பெண் சுண்டெலிக்குப் பொங்கல் கொடுத்தாள்.

''சூனியக்காரக் கிழவி வெந்நீர் அடுப்பு மூட்டப் போயிருக்கிறாள். உன்னைத் தேய்த்துக் குளிப்பாட்டி, அடுப்பில் இட்டுப் பொரித்துத் தின்னப் போகிறாள்'' என்று சொல்லிற்று சுண்டெலி.

அந்தப் பெண் குலை பதைக்க, தேம்பி அழுதாள்.

''உட்கார்ந்து கொண்டிராதே, தம்பியை எடுத்துக் கொண்டு ஓடு. உனக்குப் பதிலாக நூலை நான் திரிக்கிறேன்'' என்று யோசனை சொல்லிற்று சுண்டெலி.

பெண் தம்பியை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தாள். சூனியக்காரக் கிழவி சன்னலின் பக்கத்தில் வந்து கேட்டாள்:

''சின்னப் பெண்ணே, நூல் திரிக்கிறாயா?''
சுண்டெலி பதில் சொல்லிற்று:
''திரிக்கிறேன், பாட்டீ...''

சூனியக்காரக் கிழவி வெந்நீர் அடுப்பை மூட்டி விட்டுப் பெண்ணைப் பிடிக்கப் போனாள்: வீட்டில் ஒருவரும் இல்லை. சூனியக்காரக் கிழவி வீரிட்டாள்:

''அன்னப் பறவைகளே, விரட்டிப் பிடியுங்கள்! அக்காள் தம்பியைக் கொண்டு போய் விட்டாள்!..''

தம்பியைத் தூக்கிக் கொண்டு அக்காள் பாலாற்றை அடைந்தாள். அன்னப் பறவைகள் பறந்து வருவதைக் கண்டாள்.

''ஆற்றுத் தாயே, என்னை மறையேன்!

''என் வெறும் பழப்பாகைச் சாப்பிடு.''

பெண் அதைத் தின்று விட்டு நன்றி சொன்னாள். ஆறு அவளைப் பழப்பாகுக் கரைக்கு அடியில் மறைத்தது.

அன்னப் பறவைகள் அவளைக் காணுமல் அப்பால் பறந்து போய் விட்டன.

தம்பியைத் தூக்கிக் கொண்டு மறுபடி ஓடினுள் பெண். அன்னப் பறவைகள் திரும்பி அவளுக்கு எதிரே பறந்து வந் தன. இதோ அவளைக் கண்டு கொள்ளும் என்று தோன்றியது. என்ன செய்வது? ஆபத்து! ஆப்பிள் மரம் நின்றது...

''அம்மா, ஆப்பிள் மரமே, என்னை மறையேன்!''

''என் காட்டு ஆப்பிள் பழத்தைத் தின்னு.''

பெண் சட்டென்று பழத்தைத் தின்று விட்டு நன்றி சொன் னுள். ஆப்பிள் மரம் அவளைக் கிளைகளால் மூடி இலைகளால் மறைத்து விட்டது.

அன்னப் பறவைகள் அவளைக் காணுமல் அப்பால் பறந்து போயின.

பெண் மறுபடி ஓடினுள். ஒரே ஓட்டமாக ஓடினுள், இன் னும் கொஞ்ச தூரந்தான் பாக்கி. அப்போது அன்னப் பற வைகள் அவளைப் பார்த்து விட்டன. குவாக்குவா என்று கத்

தின, சிறகுகளை அடித்தன, தம்பியைக் கைகளிலிருந்து பிடுங்கின.

ஓடின பெண் அடுப்பை நெருங்கினாள்.

''அம்மா, அடுப்பே, என்னை மறையேன்!''

''என் கறுப்புத் தானியப் பணியாரத்தைச் சாப்பிடு.''

பணியாரத்தைச் சட்டென்று வாயில் கவ்விக் கொண்டு சிறுமி தம்பியோடு அடுப்பில் புகுந்தாள்.

அன்னப் பறவைகள் சுற்றிச் சுற்றிப் பறந்தன, கத்திக் கூவின, பிறகு சூனியக்காரியிடம் வெறுமையாகப் பறந்து போய் விட்டன.

பெண் அடுப்புக்கு நன்றி சொல்லி விட்டுத் தம்பியோடு வீடு போய்ச் சேர்ந்தாள்.

அப்போதே தகப்பனும் தாயும் வந்து விட்டார்கள்.

ТЕРЕМ-ТЕРЕМОК
Русские народные сказки
На тамильском языке

THE LITTLE CLAY HUT
Russian Folk Tales about Animals
In Tamil

இரண்டாவது பதிப்பு

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

ISBN 5-05-002032-8

ராதுகா பதிப்பகம் • மாஸ்கோ

ISBN 5-05-002032-8